23.07.2024

O.S.No. 219 of 2017

PW1 திரு.துரைசாமி

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( 1 முதல் 3வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பில்):-

சாட்சி வா.த.சா.1, 1 முதல் 3 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

இந்த வழக்கை என்னுடைய மாமனார் ஜானகிராமன் தான் தாக்கல் செய்திருந்தார். அவர் காலமானதால் அவருக்கு பின்பு வாரிசுதாரர்களாக நாங்கள் இவ்வழக்கை நடத்திவருகின்றோம். 1ம் பிரதிவாதி மணிவண்ணனுடன் பிறந்த அவருடைய 4 சகோதரிகளை இவ்வழக்கில் தரப்பினர்களாகச் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தினை நன்கு படித்துப்பார்திருக்கின்றேன். நான் தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் போர்மேனாக பணிபுரிந்து ஓவ்வு பெற்றுள்ளேன். நான் கொடுங்கையூரில் குடியிருக்கின்றேன். வழக்கு சொத்திற்கும் கொடுங்கையூருக்கும் இடையே சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். வழக்கு சொத்து 2 ஐட்டம் என்றால் சரிதான். ஐட்டம் 1ல் 4 வீடுகள் இருக்கின்றன. ஐட்டம் 2 காலி இடம். பிரதிவாதி ஐட்டம் 1யை பொறுத்து சரிசமாக பாகம் கொடுக்க முன்வந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவர் பெயரிலும், அவரின் பிள்ளைகள் பெயரிலும் பட்டா வாங்கிவிட்டார். ஐட்டம் 1ல் கண்டுள்ள வீடுகளுக்கு எனது மாமனார் பெயருக்கு பட்டா இருக்கின்றதா என்றால், சரிபாகமாக பட்டா இல்லாமல் அது தவறுதலாக குறைவான பரப்பளவிற்கு பட்டா இருக்கின்றது. பட்டா என்னுடைய மாமனார் பெயரில் 10 செண்டிற்கும் குறைவான பரப்பளவை கொண்டிருக்கின்றது. என்னுடைய மாமனார் இந்த 10 செண்டிற்குள் தான் வீடு கட்டிக்கொண்டிருக்கின்றார். வீடு 500 ச.அடி பரப்பளவு கொண்டது. அந்த வீட்டைத் தவிர மற்ற இடமெல்லாம் 10 செண்டை பொறுத்து காலியாக இருக்கின்றது. நான் தாக்கல் செய்திருக்கின்ற வழக்குரையில் ஐட்டம் 1 சொத்தில் வீடு இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் தவறு, குறிப்பிட்டிருக்கின்றேன். என்னுடைய மாமனார் அவருடைய குடும்ப விசயங்களை என்னுடன் பகிர்ந்துகொள்வார். கடந்த 2002ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 அன்று என்னுடைய மாமனாருக்கும், 1ம் பிரதிவாதி மணிவண்ணனுக்கும் இடையே ஒரு

பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவை ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரிதான். இந்த பாகப்பிரிவினை பற்றி எனக்குத் தெரியும். 2002ம் வருடத்தில் இருந்து இவ்வழக்குத் தாக்கல் செய்த காலம் வரையிலும் 1ம் பிரதிவாதியிடம் நான் பாகம் எதுவும் கேட்கவில்லை என்றால், பாகம் பிரித்த சொத்தைப் பொறுத்து நான் பாகம் கேட்கவில்லை. ஆனால் பாகம் பிரிக்கப்படாத சொத்தினைப் பொறுத்து பாகம் கேட்டேன்.

வழக்கில் சொல்லப்பட்டிருக்கின்ற இரண்டு ஐட்ட சொத்துக்களும் 2002 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தில் அடங்கவில்லை என்று சொன்னால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரம் போடப்பட்டதில் இருந்து இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட காலம் வரை 1ம் பிரதிவாதிக்கும், என் மாமனாருக்கும் இடையே எந்தத் தகராறும் இல்லை என்றால் சரிதான். அவர்களின் உறவுமுறை சுமுகமாகவே இருந்தது. என்னுடைய மாமனார் 3 பெண் பிள்ளைகளையும் வெளியூரில் கட்டிக்கொடுத்துள்ளார். என்னுடைய மாமனாரும், 1ம் பிரதிவாதி மணிவண்ணனும் ஐட்டம் 1ல் கண்டுள்ள அவரவர்களுடைய வீட்டில் தான் குடியிருந்து வந்தார்கள். என்னுடைய மாமனார் ஜானகிராமனை வயதான காலத்தில் அவருடைய பெண் மகள்கள் பராமரித்து வந்தார்கள். ஜானகிராமன் தன்னுடைய மூத்த சகோதரர் என்பதால் அவரின் தம்பியான மணிவண்ணன் பராமரிப்பில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. என்னுடைய மாமனார் அவருடைய தம்பி மணிவண்ணன் மீது இருந்த அன்பாலும், பாசத்தாலும் 05.12.2002க்கு முன்பே அவர்களுக்கு இடையே வாய்மொழி பாகம் ஏற்பட்டிருந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், ஏற்படுத்தப்பட்ட வாய்மொழி பாகத்தின் மூலமாகத் தான் என்னுடைய மாமனாருக்கு 10 சென்ட் இடம் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஐட்டம் 1ல் கண்ட சொத்தில் 10 சென்ட் போக மீதமுள்ள 22 சென்ட் நிலத்தில் 1ம் பிரதிவாதி அனுபவத்தில் இருந்து வருகின்றார் என்றால், ஆமாம் இருந்து வருகிறார்கள். ஆனால் அது தவறான ஆனுபவம். அதற்காகத் தான் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருக்கின்றேன். அப்படி தவறான அனுபோகத்தில் 1ம் பிரதிவாதி இருந்திருந்தால் என்னுடைய மாமனார் அதற்கு எதிராக நீதிமன்றத்தை அனுகி இருப்பார் என்றால்

சரிதான். அதனால் தான் இந்த வழக்கை எனது மாமனார் தாக்கல் செய்திருக்கின்றார். இவ்வழக்கைத் தாக்கல் செய்வதற்கு முன்பாக என்னுடைய மாமனார் பிரதிவாதிக்கு சட்டப்பூர்வமான அறிவிப்பை அனுப்பியிருப்பார் என்றால் சரிதான். சட்டப்படியான அறிவிப்பை வழக்கறிஞர் திரு. எம்.கே.முரளி அவர்கள் 2017ம் ஆண்டு அனுப்பி வைத்தார். அந்த அறிவிப்பின் நகல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. 2002ம் ஆண்டு பாகப்பிரினைக்குப் பின்பாக 12 ஆண்டுகளாக எந்த அறிவிப்பும் பிரதிவாதிக்கு அனுப்பவில்லை என்றால், பிரச்சனை எதுவும் இல்லாததால் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. இந்த வழக்கைத் தாக்கல் செய்யும் பொழுது என்னுடைய மாமனாருக்கு 95 வயது. என்னுடைய மாமனார் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு கால வரம்பால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கைத் தாக்கல் செய்ய என்னுடைய மாமனாருக்கு விருப்பம் இல்லை என்றால் சரியல்ல. இந்த இரண்டு சொத்துக்களையும் மற்ற சொத்துக்களையும் நான் அனுபவிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக இந்த வழக்கைத் தாக்கல் செய்து கட்சியாடி வருகிறேன் என்றால் சரியல்ல. இரண்டு சொத்துக்களிலும் சரிசமமாக எனக்கு பாகம் கேட்க உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரண :- இல்லை